# QB365 Question Bank Software Study Material

## குடிமையியல் - மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 55

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.

**பதில் :** மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயர்கள் சட்டமன்ற மேலவை, சட்டமன்ற கீழவை ஆகும்.

2) மாநில சட்டமன்ற பேரவை உறுப்பினராவதற்கு உள்ள தகுதிகள் யாவை?

**பதில் :** சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் ஒருவர் 25 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். எந்த கட்சியையும் சாராத ஒருவரும் தேர்தலில் போட்டியிடலாம்.

3) முதலமைச்சர் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்?

**பதில் :** ஆளுநர் மாநில சட்டமன்றத்தில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சியின் தலைவரை மாநில முதலமைச்சராக நியமிக்கிறார். முதலமைச்சர் அமைச்சரவையின் தலைவர் ஆவார்.

4) மாநில அமைச்சரவை குழு எவ்வாறு உருவாக்கப்படுகிறது?

**பதில் :** தேர்தலில் பெரும்பான்மை பெரும் கட்சியின் தலைவர் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்படுகிறார். முதலமைச்சர் அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்கள் தேர்வு செய்கிறார். இவ்வாறு முதலமைச்சர் மற்றும் அவரது தலைமையிலான பல்வேறு துறை அமைச்சர்களும் கொண்ட அமைப்பு மாநில அரசாங்கம் என அழைக்கப்படுகிறது.

5) 'சட்டமன்ற மேலவை' சிறுகுறிப்பு வரைக.

**பதில் :** (i) சட்டமன்ற மேலவை ஒரு மாநிலத்தின் நிலையான அவையாகும்.
(ii) இதன் உறுப்பினர்கள் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
(iii) உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகளாகும்.
(iv) இதன் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு ஓய்வு பெறுவர்.

6) ஆளுநர் பற்றி சிறுகுறிப்பு தருக.

**பதில் :** (i) மாநில அரசின் தலைவராக மாநில ஆளுநர் இருப்பார்.
(ii) இவர் இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்.
(iii) இவர் மாநில நிர்வாகத்தின் தலைவராக இருக்கிறார்.
(iv) இவரது பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும்.

7) ஒரு அரசின் அங்கங்கள் யாவை?

**பதில் :** (i) நிர்வாகத் துறை
(ii) சட்டத்துறை
(iii) செயலாக்கத்துறை
(iv) நீதித்துறை

8) மாநில சட்டமன்ற உறுப்பினர்களில் பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் யாவர்?

**பதில் :** (i) பட்டதாரிகள்.
(ii) இடைநிலை பள்ளி ஆசிரியர்கள்.
(iii) கல்லூரி, பல்கலைக் கழக ஆசிரியர்கள்.

9) இந்தியாவில் ஈரவை சட்டமன்றம் கொண்ட மாநிலங்கள் யாவை?

**பதில் :** (i) ஜம்மு காஷ்மீர்
(ii) உத்திரப்பிரதேசம்

(iii) பீகார
(iv) மகாராஷ்டிரம்
(v) தெலுங்கானா
(vi) ஆந்திரப்பிரதேசம்
(vii) கர்நாடகம்

10) MLA என்பவர்கள் யாவர்?

**பதில் :** மாநில அரசாங்கத்தின் சட்டங்களை உருவாக்குபவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் (MLA) என அழைக்கப்படுகின்றனர்.

11) ஆளுநர் குறிப்பு எழுது.

**பதில் :** ஆளுநர் ஒரு மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். மாநில அரசின் நிர்வாக அதிகாரங்கள் ஆளுநரிடம் உள்ளன. ஆளுநர் முதலமைச்சரையும் அவரது ஆலோசனையின் பேரில் ஏனைய அமைச்சர்களையும் நியமிக்கிறார்.

12) ஈரவை சட்டமன்றம் கொண்ட மாநிலங்கள் யாவை?

**பதில் :** ஆந்திரபிரதேசம், பீகார், கர்நாடகம், தெலுங்கானா, மகாராஷ்டிரம், உத்திரபிரதேசம்.

13) உயர்நீதிமன்ற நீதிபதியின் தகுதிகள் யாவை?

**பதில் :** உயர்நீதிமன்ற நீதிபதியின் தகுதிகள் இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும். இந்தியாவில் பத்தாண்டு காலம் நீதித்துறை அலுவலராக பணியாற்றி இருக்க வேண்டும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர்நீதிமன்றங்களில் வழக்குரைஞராக குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

14) ஆளுநரின் தகுதிகள் யாவை?

**பதில் :** மாநில ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு ஒருவர் இந்திய குடிமகனாக இருக்க வேண்டும். 35 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் அவர் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் உறுப்பினராக இருத்தல் கூடாது. இது தவிர ஆதாயம் தரும் எந்த ஒரு பதவியையும் அவர் வகித்தல் கூடாது.

15) மசோதா எவ்வாறு சட்டமாகிறது?

**பதில் :** 1. சட்டப்பேரவையில் மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.
2. விவாதங்களும், கருத்துப்பரிமாற்றங்களும் அதன்மீது நடைபெறுகின்றன.
3. மசோதாவில் திருத்தங்கள் கொண்டுவரப்படலாம்.
4. மசோதாவிற்கு ஆதரவாக பாதிக்கும் மேற்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் வாக்களித்தால், அம்மசோதா நிறைவேறுகிறது.
5. மசோதா ஆளுநரின் ஒப்புதலுடன் சட்டமாகிறது.

## 5 மதிப்பெண் வினாக்கள் — 5 x 5 = 25

16) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

**பதில் : முதலமைச்சரின் அதிகாரங்கள் :**
1. முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். மாநில அரசாங்கத்தின் பல்வேறு முக்கிய முடிவுகள் அவரது தலைமையின் கீழ் எடுக்கப்படுகின்றன.
2. மாநில முதலமைச்சர் அமைச்சரவையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார். முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் அமைச்சர்களை ஆளுநர் நியமிக்கிறார்.
3. முதலமைச்சர் மாநில அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.
4. பல்வேறு துறைகளை கண்காணித்து ஆலோசனை வழங்குகிறார்.
5. மாநில அரசாங்கத்தின் உயர் பதவிகளில் நியமனம் செய்யும் முக்கிய அதிகாரத்தைக் கொண்டுள்ளார். முதலமைச்சர் மற்றும் அமைச்சரவையின் ஆலோசனையின்படியே ஆளுநர் பல்வேறு உயர் அதிகாரிகளை நியமிக்கிறார்.

17) மாநில சட்டமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

**பதில் : மாநில சட்டமன்றத்தின் பணிகள்:**

1. சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அதன் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் வேண்டும்.
2. சட்டமன்றம் ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்றுமுறை கூடும்.
3. மாநிலத்திற்கான சட்டங்களை இயற்றுவது சட்டமன்றத்தின் முக்கிய பணி ஆகும்.
4. சட்டமன்றம் மாநிலப் பட்டியல் மற்றும் மத்திய பட்டியலில் உள்ள துறைகள் தொடர்பாக சட்டத்தை இயற்றலாம்.
5. மாநில அமைச்சரவை சட்டமன்றத்திற்கு பொறுப்புள்ளதாகவும் மற்றும் பதில் அளிக்கவும் கடமைப்பட்டுள்ளது.
6. மாநில சட்டமன்றம் ஆனது மாநிலத்தில் நிதியை கட்டுப்படுத்துகிறது.
7. சட்டமன்றத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் பங்கேற்கின்றனர்.
8. அரசாங்கமானது சட்டத்தை உருவாக்குதல் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் நீதியை உறுதிசெய்தல் ஆகிய மூன்று அடிப்படை பணிகளைக் கொண்டுள்ளது.

18) உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்களையும், பணிகளையும் எழுது.

**பதில் : உயர்நீதி மன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் :**

1. அடிப்படை உரிமைகள் மற்றும் இதர நோக்கங்களை வலியுறுத்த உயர்நீதி மன்றம் ஆட்கொணர்வு நீதிப்பேராணை தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை கட்டளையிடும் நீதிப்பேராணை மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்ய வலியுறுத்தும் நீதிப்பேராணை ஆகியவற்றைப் பிறப்பிக்கின்றன.
2. ஒவ்வொரு நீதிமன்றமும் தனது அதிகார எல்லைக்குள் உள்ள ராணுவ நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்கள் நீங்கலாக அனைத்து சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை கண்காணிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.
3. சார்நிலை நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள ஒரு வழக்கில் அதில் சட்ட முகாந்திரம் உள்ளது என உயர்நீதிமன்றம் திருப்தியுறும் போது இவ்வழக்கினை எடுத்து தானே முடிவு செய்யலாம்.
4. உயர்நீதிமன்றம் மாநிலத்தில் உள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்துகிறது.
5. உயர்நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தைப் போலவே வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச் சான்றாக உள்ள பதிவுரு நீதிமன்றமாக விளங்குகிறது.
6. நீதி நிர்வாகத்திற்காக ஒவ்வொரு மாநிலமும் பல்வேறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டமும் மாவட்ட நீதிமன்றத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கும், மாவட்ட நீதிபதிகள் ஆளுநரால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

19) ஆளுநரின் நிலையினை விளக்குக.

**பதில் :** (i) மாநில ஆளுநர் குடியரசுத் தலைவரைப் போன்று மாநிலத்தில் பெயரளவு நிர்வாகத் தலைவராக உள்ளார்.
(ii) அவர் மத்திய அரசின் ஒரு முகவராக மாநிலத்தில் செயல்படுகிறார்.
(iii) அவர் மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றிற்கிடையேயான உறவுகளைப் பராமரிப்பதற்குப் பொறுப்பு வாய்ந்தவர் ஆவார்.
(iv) ஆளுநர் முக்கியமான தருணங்களில் அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குகிறார்.
(v) மாநிலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான ஆளுநரின் அறிக்கையின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் மாநிலத்தின் நெருக்கடி நிலையை அறிவிக்கிறார்.
உறுதி செய்யப்படுகிறது.
(vi) ஆளுநர் விருப்புரிமை அதிகாரத்தை செயல்படுத்தும்போது தன்னிச்சையான முடிவுகளை எடுக்கிறார்.
(vii) அவர் அமைச்சரவையிடமிருந்து அரசாங்கத்தின் செயல்பாடுகள் குறித்த தகவல்களைக் கோரிப்பெறலாம்.

20) ஒரு மசோதா எவ்வாறு சட்டமாகிறது - விளக்குக.

**பதில் :** (i) சட்டப்பேரவையில் மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.
(ii) விவாதங்களும், கருத்துப் பரிமாற்றங்களும் அதன் மீது நடைபெறுகின்றன.
(iii) மசோதாவில் திருத்தங்கள் கொண்டு வரப்படலாம்.
(iv) மசோதாவிற்கு ஆதரவாக பாதிக்கும் மேற்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் வாக்களித்தால் அம்மசோதா நிறைவேறுகிறது.
(v) மசோதா ஆளுநரின் ஒப்புதலுடன் சட்டமாகிறது.